தமிழை வாசிப்போம்! நேசிப்போம்! சுவாசிப்போம்!

குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம்

Kurinji Muthamizh Sangam

# நிகழினி இதழ்

## NIGAZHINI MAGAZINE

ஆசிரியர் : சந்திரா ஸ்ரீதர் பதிப்பு : 5/2024/1




தாய்மொழியைப் போற்றுதல்
தரணிக்கே பெருமையன்றோ!
வாய்வழி உரையாடல்
வானாகப் பரவிடுமே!

அகர முதலாகி
அகிலமொழி தாயாவாள்!
நிகராக எம்மொழியும்
நிலத்தில் யாதுமில்லையே!

மாங்கனி சுவையாக
மக்களுக்கு அறமூட்ட,
தங்கமாக மின்னிடுவர்
தமிழைக் கற்றோரே!

**Editor : Mrs.Chandra Srithar**
**ஆசிரியர் :திருமதி. சந்திரா ஸ்ரீதர்**

ஆசிரியர் இலாகா விளம்பரம் முகவரி
5252 E 130th circle
Thornton
Colorado 80241,USA.
chandra.srithar01@gmail.com

**Co-editor : Master. Suryha Venkataramani**
**இணை ஆசிரியர்:**
**செல்வன். சூரியா வெங்கட்ரமணி**

**குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம்**, "நிகழினி இதழ்" தமிழ் சமூகத்திற்காக டிஜிட்டல் வடிவில் வெளியிடுவதில் பெருமை அடைகிறது.

நிகழினி என்றால் மங்கா அறிவொளி பொருந்தியவள், பிரகாசமாக சொலிப்பவள் என்று பொருள்.

இந்த இதழ் தொன்மையான நம் தமிழ்மொழியை நேசிக்கும் மக்களின் சுயப்படைப்புகள் மற்றும் நிர்வகிக்கப்பட்ட படைப்புகளை உங்கள் வாசிப்புக்காகக் கொண்டு வரும்.

இந்த இதழில் நிர்வகிக்கப்பட்டப் படைப்புகள் அனைத்தும் வாசகர்கள் நல்லத் தமிழ் படிக்கும் நோக்கத்தில் இடம் பெறுகின்றன.

பேட்டிகள் மற்றும் சிறப்புக்கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அதை எழுதியவர்களின் சொந்தக் கருத்துகளே!

எந்தவொரு நகல் உரிமைச் சிக்கலுக்கும் உண்மைத்தன்மைக்கும் குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம் பொறுப்பல்ல.


## ஆசிரியர் பக்கம்

நிகழினி நிரந்தரம்!

இந்த இதழில் உங்கள் பங்களிப்பை வரவேற்கிறோம்.
மகிழ்ச்சியாக வாசியுங்கள்!

தோல்வியின்  அடையாளம் தயக்கம்!
வெற்றியின் அடையாளம் துணிச்சல்!
துணிந்தவர்  தோற்றதில்லை!
தயங்கியவர் வென்றதில்லை!
-- மகாகவி பாரதியார்

கற்றல்  என்பது, கல்வியில்  ஒருவகை
படித்தல் என்பது, சொல் வளத்தின் மறுமுகம்
எழுதுதல் என்பது, ஏனைய அனைத்திற்கும்   ஏணிப்படி!
எடுத்துக்காட்டு,
வள்ளுவரின் திருக்குறள் அவர் எழுதியதால் மட்டுமே,
இன்றும் உலகப் பொதுமறையாகத்  திகழ்கிறது.
எனவே, வருங்காலத்  தலைமுறைகளின்
எழுதும் திறனை, ஊக்குவிக்கும் வகையில்
அவர்களின் எழுத்துக்களை வெளியிடுவதில்
நிகழினி நிர்வாகம் பெருமைக் கொள்கிறது



இங்ஙனம்
**திருமதி.சந்திரா ஸ்ரீதர்**
ஆசிரியர்

என்னால் மறக்கமுடியாத திருக்குறள். எனக்கு மிகவும் பிடித்த திருக்குறள்:

குறள்: 108

'நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று"

பொருள்:

ஒருவர் செய்த நன்மையை மறப்பது நல்ல பண்பு ஆகாது; ஆனால், அவர் செய்த தீமையை அன்றைக்கே மறந்து விடுவது மிகவும் நல்லது.

ஏன் இது எனக்கு பிடிக்கும் என்றால், வாழ்க்கை மிகவும் சிறியது. எனவே வாழ்க்கையை மகிழ்ச்சியுடனும், சந்தோசத்துடனும் வாழவேண்டும். ஆகையால் நற்சொற்கள் மற்றும் பாராட்டுக்களையும் மனதில் வைத்துக்கொண்டு, தீயதை மறப்பதே மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு வழியாகும்.

அதனால், இந்த திருக்குறள் எனக்கு பிடித்த திருக்குறள் ஆகும்.

நன்றி!

- சூர்யா.



# திருக்குறள் அறிவோம்



**கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி**

ஒருவர்க்கு வாழ்வும், தாழ்வும் உலக இயற்கை; அந்த இரு நிலைமையிலும் நடுவுநிலையாக இருந்து உறுதி காட்டுவதே பெரியோர்க்கு அழகாகும்

The gain and loss in life are not mere accident;
just mind inflexible in sage's ornament.

**திருக்குறள் எண்** : 115
**பால்** : **அறத்துப்பால்**
**அதிகாரம்** : **நடுவு நிலைமை**

மதியினை விதியே வெல்லும்
வாழ்க்கையைக் கனவே வெல்லும்
வதைபட்ட நிலையில் இந்த
மனிதனை மரணம் வெல்லும்



-கவியரசு கண்ணதாசன்

# உலக மகளிர் தின வாழ்த்துகள்

பெண்மையென்றால் உண்மை!
பெண்ணுக்குள் உள்ளது தன்மை!
பெண்மையைப் போற்றுவோம் !
நற்பணியை ஆற்றுவோம்!



# உயிர்களிடம் அன்பு பாராட்டல் ---- தமிழர் பண்பாடு .

## திருமதி . ஞானப்பூங்கோதை சுப்பிரமணியன்.



**" தமிழன் என்றோர் இனமுண்டு ;**
**தனியே அவற்கொரு குணமுண்டு "**

வேறு எந்த இனத்திற்கும் மொழிக்கும் இல்லாத பெருமை தமிழுக்கும் தமிழருக்கும் உண்டு . எப்படியும் வாழலாம் என்று வாழ்வது வாழ்க்கை அல்ல . மனித இனம் இப்படித்தான் வாழவேண்டும் என்று வாழ்ந்து காட்டிய இனம் நம் தமிழினம் .

உயிர் வாழ்க்கைக்கு அடிப்படைத் தேவை அன்பு . அதனால் தான் வள்ளுவர் " அன்பின் வழியது உயிர் நிலை " என்றார். தமிழர்களின் பண்பாட்டுக் கூறுகளாகச் சொல்லப்படும் காதல், வீரம், நட்பு, விருந்தோம்பல், ஈகை, கொடை, மனித நேயம் போன்ற எல்லாவற்றுக்கும் அடிப்படையாக இருப்பது அன்பு மட்டுமே.

போரில் தங்கள் வீரத்தைக் காட்டி எதிரிகளைக் கதிகலங்கச் செய்த மன்னர்கள் கூடத் தங்களைச் சுற்றியுள்ள உயிர்களிடம் ஈர நெஞ்சினராய் இருந்திருக்கிறார்கள் என்பதற்குச் சங்க இலக்கியங்கள் சான்று பகர்கின்றன .

" **அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்**
**மறத்திற்கும் அஃதே துணை** " என்பது வள்ளுவம்.

அறவாழ்விற்கே அன்பு சார்பாகும் என்று அறியாதார் சொல்வர். ஆனால் வீரச் செயல்கள் நிகழ்வதற்கும் அன்பே துணை செய்கிறது. இராமன் அன்பே வடிவானவன் ஆனபடியால் தான் நிராயுத பாணியாக நின்ற இராவணனை " இன்று போய் நாளை வா " என்றான். கண்ணகி கோவலன்பால் கொண்ட அன்பு தானே அவளைப் பாண்டிய மன்னன் முன் நின்று வழக்குரைத்து நீதி கேட்கும் ஒரு வீரப் பெண்மணியாக மாற்றியது.

சங்க கால மன்னர்கள் எதிரி நாட்டின் மீது படை யெடுத்துச் செல்லும்போது கூட அவர்கள் ஈரமும் இரக்கமும் உடையவர்களாக இருந்ததனைச் சங்க இலக்கியங்களில் நாம் காண முடிகிறது. " ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும் " என்ற புறநானூற்றுப் பாடலில் சங்க கால மக்களின் போர் மரபு கூறப்படுகிறது.
பசுவும், அந்தணரும், பெண்களும், நோயுற்றவர்களும், இன்னும் புத்திரர்களைப் பெறாதவர்களும் பாதுகாப்பான இடத்துக்குச் செல்லுமாறு முரசறைந்து அறிவுறுத்திய பின்னரே ஒரு மன்னன் எதிரி நாட்டின் மீது போர் தொடுப்பான் " என்ற அறம் சார்ந்த போர் மரபு அப்பாடலில் சொல்லப்படுகிறது.

அதியமான் நெடுமான் அஞ்சி என்ற மன்னன் தனக்கு அரிதாகக் கிடைத்த ஓர் அரிய வகை அருநெல்லிக் கனியைத் தான் உண்ணாமல் ஔவைக்குத் தந்தான் . காரணம், உண்டவரைப் பல காலம் வாழ வைக்கும் ஆற்றல் கொண்டது அந்த அருநெல்லிக் கனி. அப்படிப்பட்ட கனியைத் தான் உண்டு பல காலம் உயிர் வாழ்வதைக் காட்டிலும் ஔவையாருக்குக் கொடுப்பதன் மூலம் தமிழை வாழ வைக்க எண்ணினான்.

பறம்பு நாட்டை ஆண்டு வந்த பாரி தேரில் ஏறி நகர் வலம் சென்றபோது, கொழுகொம்பின்றிக் காற்றில் அலைந்து கொண்டிருந்த முல்லைக் கொடியைப் பார்த்ததும், தான் ஏறி வந்த தேரையே அம் முல்லைக் கொடிக்குக் கொழுகொம்பாக வைத்துவிட்டு நடந்தே அரண்மனைக்குச் சென்றானாம்.

கடையெழு வள்ளல்களுள் ஒருவனான பேகன் என்ற குறுநில மன்னன், கார்மேகத்தைக் கண்ட மகிழ்ச்சியில் தன் அழகிய தோகையை விரித்து ஆடிக் கொண்டிருந்த மயிலைப் பார்த்தான். வாடைக் காற்றினால் மயில் குளிரில் நடுங்குகிறது என எண்ணித் தன் மேலாடையை எடுத்து அந்த மயிலுக்குப் போர்த்திவிட்டு வந்தானாம்.

அதனால் அவ்விருவரும்
" முல்லைக்குத் தேரீந்த பாரி " என்றும், " மயிலுக்குப் போர்வை தந்த பேகன் "
என்றும் புலவர்களால் பாராட்டப் பெற்றனர்.
தன் மகன் பசுவின் கன்றின் மேல் தேர் ஏற்றிக் கொன்று விட்டான் என்றறிந்து, கன்றை இழந்து வருந்தும் தாய்ப் பசுவின் துன்பத்தைத் தானும் அனுபவிக்க எண்ணித் தன் மகனைக் கொல்லத் துணிந்த மனுநீதிச் சோழனைப் பெரிய புராணம் போற்றுகிறது.
இவர்களுடைய இச்செயல்களுக்கு எல்லாம் அடிப்படைக் காரணமாக இருந்தது தம்மைச் சுற்றியுள்ள உயிர்களிடம் ( மனிதர்கள் மட்டுமன்றித் தாவரம், பறவைகள், விலங்குகள் ) அவர்கள் கொண்டிருந்த அளவற்ற அன்பு தானே!
அதனால் தான் பாரதியாரும்,
" காக்கை குருவி எங்கள் சாதி --- நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்
நோக்கும் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை ,
நோக்க நோக்கக் களியாட்டம் " என்று ஆனந்தக் கூத்தாடுகிறார்.
அது மட்டுமல்ல,
" உயிர்களிடத்தில் அன்பு வேணும் -- தெய்வம்
உண்மை யென்று தானறிதல் வேண்டும் " என்று பாப்பா பாட்டில் பாப்பாவுக்கு அறிவுரை கூறுகிறார்.
" அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு " என்ற பொய்யாமொழிப் புலவரின் வாக்கு என்றும் பொய்க்காது அல்லவா!
ஏனென்றால் அன்பு என்னும் பண்பு நம் தமிழர்களின் உணர்வில் இரண்டறக் கலந்திருக்கிறதே!

# திரு. சுகுமாறன் மாரியப்பன்



பதினெட்டு விதக் குணங்களின் நல்லவற்றைப் பின்பற்றியும், தீயவற்றைக் களைந்தும் வாழ்க்கைப் படியில் ஏறிச் சென்றால் தான் இறைவன் அருள் நமக்குக் கிடைக்கும் என்பதின் அடிப்படையில் கீதை 18 அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

**1 காமம்:**

பற்று உண்டானால் பாசம், மோகம் ஏற்பட்டுப் புத்தி நாசமடைந்து அழிவு ஏற்படுகிறது என்பதைக் கீதையின் முதல் அத்யாயம் நமக்கு விளக்குகிறது.

**2 குரோதம்:**

கோபம் குடியைக் கெடுத்து, கொண்டவனையும் அவன் சுற்றத்தையும் சேர்த்து அழித்து விடும் என்பதைக் கீதையின் இரண்டாவது அத்யாயம் நமக்கு விளக்குகிறது.

**3 லோபம்:**

பேராசைக்கு இடம் கொடுத்தால் இருப்பதும் போய்விடும், ஆண்டவனை அடைய முடியாது என்பதைக் கீதையின் மூன்றாவது அதிகாரம் நமக்கு விளக்குகிறது.

**4 மதம்:**

யானைக்கு மதம் பிடித்தால் ஊரையே அழித்து விடும் அந்த யானையை அப்போது யாராவது விரும்புவார்களா? அதுபோல் வெறிப் பிடித்தவனை ஆண்டவன் வெறுத்துவிடுவான் என்பதைக் கீதையின் நான்காவது அதிகாரம் நமக்கு விளக்குகிறது.

**5 மாத்ஸர்யம்:**

மனதில் பொறாமையை நிலைநிறுத்தி வாழ்பவனுக்கு, வேறு பகையே வேண்டாம் அதுவே அவனை அழித்துவிடும் என்பதைக் கீதையின் ஐந்தாவது அதிகாரம் விளக்குகிறது.

**6 டம்பம் (வீண் பெருமை):**

அசுர குணமானது நமக்குள் இருக்கக்கூடாது என்பதைக் கீதையின் ஆறாவது அதிகாரம் விளக்குகிறது.

**7 அகந்தை:**

தான் என்ற அகந்தை கொண்டவன் ஒரு போதும் வாழ்வில் முன்னேறவே முடியாது. அகந்தை என்பது முடிவில்லா ஒரு சோகச் சுமை. இதனால் ஏற்படும் தீமைகளைக் கீதையின் ஏழாவது அத்யாயம் நமக்கு எடுத்துச் சொல்கிறது.

**8 சாத்வீகம்:**

விருப்பு, வெறுப்பு இன்றி கர்மம் செய்தல் வேண்டும். இதனைக் கீதையின் எட்டாவது அத்யாயம் நமக்கு எடுத்துச் சொல்கிறது.

**9 ராஜஸம்:**

அகங்காரத்தோடு கருமம் செய்தல் கூடாது இதனைக் கீதையின் ஒன்பதாவது அத்யாயம் நமக்கு எடுத்துச் சொல்கிறது.

**10 தாமஸம்:**

அற்ப புத்தியை பற்றி நிற்பது மதி மயக்கத்தால் வினை செய்வது. அப்படிச் செய்யப்படும் வினையால் ஏற்படும் துன்பம் போன்றவற்றைக் கீதையின் பத்தாவது அத்யாயம் நமக்கு எடுத்துச் சொல்கிறது.

**11 ஞானம்:**

எல்லாம் ஆண்டவன் செயல் என்று அறியும் பேரறிவு பற்றி இந்த அத்யாயம் தெளிவாக விளக்குகிறது.

**12 மனம்:**

நம்மனம் கெடாது, பிறர் மனம் வருந்தாது வாழ வேண்டும் எப்போதும் ஐயன் நினைவே மனதில் இருக்க வேண்டும். அது எப்படி என்பதைத் தான் கீதையின் பன்னிரெண்டாவது அத்யாயம் விளக்குகிறது.

**13 அஞ்ஞானம்:**

உண்மைப் பொருளை அறிய மாட்டாது. மூடி நிற்கும் இருளை விளக்கி மெய் ஞானத்தை அடைய வழி வகைச் செய்கிறது இந்த அத்யாயம்.

**14 கண்:**

ஆண்டவனைப் பார்க்கவும், ஆனந்தக் கண்ணீர் உகுக்கவுமே ஏற்பட்டது இந்த அத்யாயம்.

**15 காது:**
ஆண்டவனின் மேலான குணங்களைக் கேட்டு, அந்த ஆனந்தக் கடலில் மூழ்க வேண்டும். அது எப்படி என்பதை இந்த அத்யாயம் எடுத்துரைக்கிறது.
16 மூக்கு:
ஆண்டவனின் சன்னதியிலிருந்து வரும் நறுமணத்தை முகர வேண்டும். அத்துடன் பக்தியில் ஆழ்ந்து முக்தி பெரும் வழியை இந்த அத்யாயம் எடுத்துக் கூறுகிறது.
**17 நாக்கு:**
கடுஞ் சொற்கள் பேசக்கூடாது. அது பற்றிக் கூறுகிறது இந்த அத்யாயம்.
**18 மெய்:**
இரு கரங்களால் இறைவனைக் கைகூப்பித் தொழ வேண்டும். கால்களால் ஆண்டவன் சன்னதிக்கு நடந்துச் செல்ல வேண்டும். உடல் பூமியில் படும்படி விழுந்து ஆண்டவனை நமஸ்கரிக்க வேண்டும்.

## புதிர்

இது ஒரு பூ
முதற்பகுதி ஆதவனின் மறுபெயர்;
பிற்பகுதி இந்தியாவின்
தேசத் தந்தையைக் குறிக்கும்.
அது என்ன?

விடை : சூரியகாந்திப் பூ

**எழுத்தாளர் திருமதி. அனு அசோக்**



ஜெயம் -4

சூர்யாவின் தாய் வாசுகியின் முன்னால் அமர்ந்திருந்தாள் இந்து... இடைப்பட்ட இரண்டு மாத காலத்தில் பெண்ணைப் பறிகொடுத்த துக்கத்திலிருந்து சிறிது சிறிதாக வெளிவந்திருந்தவரின் முகம் சாந்தமாக காட்சி அளித்ததில் தயக்கமின்றி அவளால் கேள்விகளை கேட்க முடிந்தது.

"ஸ்ரீஷா உங்களுக்கு ஒரே பெண்ணா...?"
"ஆமாம்மா...! சூர்யா பிறந்து மூன்று வருஷம் கழிச்சு பொறந்த பொண்ணு... சின்ன வயசில இறந்தே ரொம்பச் சுட்டியா இருப்பா...! படிக்கிற காலத்துலையும் அப்படித்தான் எதாவதுப் பிரச்னையை இழுத்துட்டு வந்திடுவா...! ஆனால், எல்லாருக்கும் உதவி செய்யணும்னு நினைக்கிறவம்மா என் பொண்ணு...!

அவளுக்கு இப்படி ஆகிருக்க கூடாது" அவர் குரல் உடைந்தது. அதில் இழையோடிய வேதனையைக் கண்டு அவரை ஆசுவாசப்படுத்த அடுத்த கேள்விக்குத் தாவினாள் இந்து...

"உங்க பொண்ணோடது காதல் திருமணமா...? உங்க விருப்பத்தோட தான் ஸ்ரீஷா ராம்சரணை மேரேஜ் பண்ணிக்கிட்டாங்களா...?" "ம்ம்... முதல்ல நாங்க அவளோட விருப்பத்துக்குச் சம்மதிக்கலை... என் பையனுக்கும், பொண்ணுக்கும் இதனால நிறைய வாக்குவாதம் நடந்தது...

கடைசிவரைக்கும் ஸ்ரீ மனசை எங்களால மாற்ற முடியலை... அவள் ரொம்ப பிடிவாதமா இருந்ததால சரணுக்கே அவளை கல்யாணம் செய்து குடுத்துட்டோம்..." அவர் சொல்லிக் கொண்டிருக்கும் போது, ஒரு இளம் யுவதியும் ஐந்து வயது குழந்தையும் வீட்டிற்குள் பிரவேசித்தார்கள்.

இந்துவின் கவனம் அவர்களிடம் செல்ல... தூய்மையான பள்ளிச் சீருடையுடன் நின்றிருந்த குழந்தை, கைநீட்டிய வேலை ஆளிடம் பாக்பேக்கை கொடுத்து விட்டு நிதானமாக நடந்து வந்து வாசுகியிடம் நின்றது. “தியா குட்டி! ஸ்கூல்ல இருந்து வந்துட்டீங்களா...? இருங்க பாட்டி ஜூஸ் எடுத்திட்டு வரேன்.” பாசமிகு குரலில் சொல்லிக் கொண்டே எழப்போனவர்... ‘விசாரனை செய்ய வருபவர்களிடம் முழு ஒத்துழைப்புடன் நடந்து கொள்ள வேண்டும்’ என்ற மகனின் கட்டளை சட்டென்று நியாபகத்திற்கு வரவும்... ‘இன்னும் கேள்விகள் இருக்கிறதா என்பது போல’ இந்துவை பார்த்து தயங்கி நின்றார்.

“யூ கேரி ஆன்... வேற எதுவும் தேவை என்றால் கூப்பிடுறேன்...” அவள் சொன்னதும் அவ்விடத்திலிருந்து அவர் நகர... அதுவரை அவளையேப் பார்த்திருந்த தியா, சாதுவாக தனது பாட்டியுடன் சென்றது. உருண்டை முகம், அழகான கண்கள் என்று செழிப்பான தோற்றத்துடன் இருந்த சிறுமி, குழைந்தைகளுக்குரிய கூச்சலோ, குழைவோ இன்றி ஆர்பாட்டமில்லாத நடத்தையுடன் செல்வதை அளவிட்டு கொண்டிருந்தவள்... அந்த இளம் பெண்ணிடம் திரும்பி...
“ஆர். யூ மிஸ் ப்ரீத்தி...? கேட்டதற்கு அவள் ஆமோதிப்பாய் தலையசைக்க... "உங்க கிட்ட என்கொயரி பண்ண வேண்டி இருக்கு... பி சீட்டட்...” எதிரே இருந்த இருக்கையை காட்டிவிட்டு... “உங்களுக்கும் ஸ்ரீஷாவுக்கும் எத்தனை வருட பழக்கம்...?” தனது விசாரணையைத் துவக்கினாள்.

“ஆறு வருஷத்துக்கும் மேல பழக்கம்... நானும் ஸ்ரீயும் ஒரே காலேஜ்ல தான் படிச்சோம்... டிகிரி முடிச்சதும் நான் ஒரு பிரைவேட் கன்சர்ன்ல வொர்க் பண்ணிட்டு இருந்தேன்... ஸ்ரீஷா சென்னைல கம்பெனி ஆரம்பிச்சதும் என்னையும் வொர்க்கிங் பார்ட்னரா சேர்த்துக்கிட்டா... அப்படி தான் எங்க பிரிண்ட்ஷிப் கன்டினியூ ஆச்சு” எந்தவித தயக்கமும் தடங்களுமின்றி பதில் வந்ததில்... “வொர்க்கிங் பார்ட்னர்ன்னு சொல்றீங்க நீங்க ஏன் அவங்க கூட கொடைக்கானல்ல நடந்த கான்பிரன்ஸ்க்கு போகலைன்னு தெரிஞ்சிக்கலாமா...?” இடைச் சொருகலாகக் கேள்விப் பிறந்தது.

“வழக்கமா எல்லா கான்பிரன்ஸ்க்கும் நானும் ஸ்ரீஷா கூட போவேன்... நோர்வேல இருக்கிற ஒரு டெலகாம் கம்பெனி கூட எங்களுக்கு டையப் இருக்கு... சரியா அந்த நேரத்துல அவங்க ப்ராஜெக்ட்ஸை உடனே முடித்து கொடுக்க வேண்டியக் கட்டாயத்துல இருந்தோம்.

அதனால, அந்த ரெஸ்பான்ஸிபிலிட்டியை என்கிட்டே குடுத்திட்டு ஸ்ரீஷா மட்டும் கொடைக்கானல் கிளம்பி போனாள்... அவள் கூட நானும் போயிருக்கனும்... போயிருந்தா கண்டிப்பா அந்த ஆக்ஸிடென்ட் நடந்திருக்கவே விட்டிருக்க மாட்டேன். அவளை தனியா அனுப்பினதை நினைச்சு நான் பீல் பண்ணாத நாளே இல்லை...” மிகுந்த வருத்தத்துடன் கூறிக்கொண்டிருந்தவள், கூற்றில் எந்த அளவிற்கு உண்மை இருக்கிறது என்பதை பற்றிய கணக்கீட்டுடன் வினாக்களைத் தொடர்ந்தாள் உளவறியும் யுத்தியைப் பயின்றிருந்தவள்.

சற்று நேரத்தில் உள்ளே சென்றிருந்த வாசுகியும், தியாவும் அங்கே வந்தார்கள்... அவர்களுடன் வந்த வேலையால் ஒருவன் கையுடன் கொண்டுவந்திருந்த ஸ்நாக்ஸ், ஜூஸை இந்துவின் முன்னே வைக்கவும், "சாரி! என்கொயரிக்காகப் போற இடத்துல நான் எதுவும் சாப்பிடுறப் பழக்கமில்லை" அவள் மறுத்துவிட, ப்ரீத்தியும் வாசுகியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். அவர்களின் பார்வை பரிமாறலைக் கண்டு கொள்ளாமல், பள்ளிச்சீருடையை மாற்றிவிட்டு மஸ்டட் எல்லோ நிற பிராக்கில் குட்டி தேவதையாக நின்றிருந்தக் குழந்தையிடமும் சில கேள்விகள் கேட்க வேண்டும் என்று அவள் சொன்னதும்...

நான்கு வயது குழந்தையிடம் கூட விசாரணையா? என்று ப்ரீத்தி ஆட்சேபனை தெரிவிக்க... தயக்கத்துடனே வாசுகி சம்மதித்துவிட்டு சென்றார். அவர்கள் சென்றதும், சிறுமியின் மனம் நோகாமல் எப்படி விசாரிப்பது என்ற யோசனைக்கு இந்து, சில நிமிடங்கள் எடுத்துக் கொள்ள... முகத்தில் எந்தவித பய உணர்வும் இல்லாமல் அவளையேப் பார்த்திருந்த தியா, "அயம் தியா! உங்க பேர் என்ன ? தன்னைத் தானே அறிமுகம் செய்து கொண்டதோடு அவளது பெயரையும் அழகான கிள்ளை மொழியில் கேட்க... குழந்தையை பார்த்து மெல்லிய சிரிப்பை உதிர்த்தவள் " இந்துமதி..!" என்றாள்.

"இந்துமதி...!" என்று சொல்லிப்பார்த்து "கேன் ஐ கால் யூ இந்து...!" மழலை மாறாமல் வினவியதற்கு "வொய் நாட்" என்று அவளால் புன்னகைக்கத்தான் முடிந்தது.

"நீங்க மம்மியைப் பற்றி தானே கேட்கப் போறீங்க...? சூர்யா மாமா மோர்னிங்கே சொன்னாங்க... ஒரு போலீஸ் ஆண்ட்டி நம்ம வீட்டுக்கு வருவாங்க... அவங்க உன் கிட்ட மம்மியைப் பற்றி எதாவது கேள்வி கேட்டா அழாம பதில் சொல்லணும்னு..." சொன்ன தியா சற்று கம்மிய குரலில், "என் மம்மிக்கு ஆக்ஸிடென்ட் நடந்தப்போ நான் சென்னைல இல்ல... மாமா, பாட்டி கூட பாட்னால இருந்தேன்" என்றதும் திக்கென்று பார்த்தாள் இந்து, அந்த சின்னஞ்சிறு மலரிடம் வயதிற்கு மீறிய பக்குவமும், தெளிவும் இருப்பதை பார்த்து அவளால் சந்தோஷப் படமுடியாமல் மனதை என்னவோ செய்தது.

"மேடம் இங்கிருக்கிற செர்வன்ட்ஸ், வாட்ச்மேன் எல்லார் கிட்டையும் என்கொயரி பண்ணியாச்சு... அவங்களுக்கு எதுவும் தெரியல எல்லாருமே புதுசா வேலைக்கு சேர்ந்தவங்க..." முரளி அவளிடம் வந்து கூற... திகைப்பிலிருந்து அடுத்த கணமே சகஜமாகியவள்..

"இட்ஸ் ஓகே... ராம்சரண் வீட்ல வேலை செய்ற செர்வன்ட்ஸ் எல்லாரும் வந்திருக்காங்களா...? அவங்க கிட்ட என்கொயரி முடிச்சிட்டீங்களா...?" இயம்பினாள்.

"இல்லை மேடம்! அவர் எதோ பிஸ்னஸ் ட்ரிப் போயிருக்கார்... அந்த டென் டேஸ் யாருமே வீட்ல இருக்க மாட்டாங்களாம்... அவர் வந்த பிறகு தான் திரும்ப வேலைக்கு வருவாங்களாம்... "அப்போ ராம்சரணும் என்கொயரிக்கு இங்க வரலையா...?" சற்றே குரலை உயர்த்தி கேட்ட கேள்விக்கு முரளி பதில் சொல்வதற்கு முன் தியா அவளுக்குத் தேவையான தகவல்களை தனது செப்பு வாயை திறந்து நவிழ்ந்தது.

"டாடி, இங்க வர மாட்டாங்க... சூர்யா மாமாவுக்கு டாடி இங்க வந்தா பிடிக்காது...! என்னையும் டெய்லி ஸ்கூலுக்கு வந்து தான் பார்ப்பாங்க... நான் வீக்கென்ட்ஸ் மட்டும் டாடி கூட எங்க வீட்டுக்கு போயிடுவேன்..." சொன்னதும், விஷயத்தை கூர்மையாக கிரகித்துக் கொண்டவளுக்கு வருத்தத்தை வெளிக்காட்டாமல் பேசிய குழந்தையின் மனநிலையையும் ஓரளவு புரிந்து கொள்ள முடிந்தது.

"அப்படியா? அப்போ தியா அழாம டெய்லி ஸ்கூல் போவிங்களா? குழந்தைக்குச் சரிக்குச் சமமாகக் குனிந்து பேசியவளை முரளி வியப்பாகப் பார்த்திருக்க...
"ஏன் அழனும்? மம்மி எதுக்கும் அழ கூடாதுனு சொல்லிருக்காங்க... ஏன், உங்க மம்மி உங்களுக்குச் சொல்லிக் கொடுத்தது இல்லையா...?" கேள்வியில் தன்னை மறந்து முறுவலித்த இந்து...
"ம்ம்ம்... என் மம்மியும் சொல்லிக் கொடுத்திருக்காங்க..." சிறுமி வழங்கிய துண்டு துண்டான தகவல்களை எண்ணத்தில் வரிசைப்படுத்திக் கொண்டே கூறியவள், சிந்தை ஒரு விஷயத்தை தெளிவு படுத்திக் கொள்ள விழைந்தது.
"சரி, ஹாலிடேஸ்க்குப் பாட்னா (Patna) போனேன்னு சொன்னீங்க இல்லை... தியா மட்டும் தான் தனியா போனிங்களா...?" வினவியதற்கு...
"இல்லையே, நான் சின்ன பொண்ணு தானே எப்படி தனியா போறது. பாட்டி வந்துக் கூட்டிட்டு போனாங்க.." இவ்வளவுப் பெரிய பொண்ணாக இருக்கிறாய் இது கூட உனக்கு தெரியாதா என்ற பார்வையுடன் வந்த பதில் அவள் மனதில் தேங்கி நின்ற வினாவிற்கான விடையைப் பூர்த்தி செய்யும் வகையிலே இருந்ததில் அறிவு அடுத்தக்கட்ட விசாரணையைப் பற்றி சிந்தித்திருக்க...
"மேடம்! கலக்டர் சார் வராங்க...!" முரளி அவசரமாகச் சொல்வதற்கும் சூர்யா உள்ளே வருவதற்கும் சரியாக இருந்தது. அவனது வருகையை உணர்ந்து காவல்துறையைச் சார்ந்த மற்ற மூவரும் விஷ் செய்வதையும், அதை ஏற்றுக் கொண்ட சூர்யாவின் பார்வை தன்மீது படிவதையும் அறிந்தாலும், அவனது பார்வையை அலட்சியம் செய்து சாதாரணமாக எழுந்து நின்றாள் இந்து...
அவள் வெளிப்படையாகக் காட்டிய அலட்சியத்தை உணர்ந்தும் உணராதது போல அவளிடம் வந்தவன்... “அம்பத்தூர் இண்டஸ்ட்ரியல் ஏரியாவில் ஒரு ஃபயர் ஆக்ஸிடென்ட்... சீக்கிரம் வந்திடலாம்னு தான் ட்ரை பண்ணேன் முடியல... எல்லாரும் உங்களுக்கு ஒழுங்கா கோவாப்பரேட் பண்ணாங்களா? அவள் பதில் சொல்ல இடமளிக்காமல் கடகடவென பேசியவன்... " ஆபீஸ் ரூம்ல வெயிட் பண்ணுங்க, பைவ் மினிட்ஸ்ல வந்துடுறேன்..." அவனை ஒட்டி நின்ற தியாவை தூக்கிக்கொண்டு "அம்மா..." என்ற கூவலுடன் வீட்டிற்குள் சென்றான்.

சொன்னது போலவே சில நிமிட இடைவெளியில் அவன் திரும்பிய போது அவனுக்காக ஆபீஸ் ரூமில் காத்திருந்தாள் இந்து... "நீங்களும் உங்க டீம் மெம்பர்ஸும் இவ்ளோ சுறுசுறுப்பா வேலையைத் தொடங்குவீங்கன்னு நான் எதிர்ப்பார்க்கலை மிஸ் இந்துமதி...! தேங்க்ஸ் ஃபோர் தட்..." நாற்காலியில் அமர்ந்த வண்ணம் நல்ல விதமாகவே பேச்சைத் துவங்கி..." சொல்லுங்க, இந்த கேஸைப் பற்றி நீங்க என்ன நினைக்கிறீங்க...?" அவளது கருத்தை அறிந்து கொள்ள முற்பட்டவனிடம்...

"இன்னைக்குத் தான் என்கொயரி ஸ்டார்ட் பண்ணிருக்கோம்... இப்போதைக்கு எதுவும் சொல்ல முடியாது... நீங்க இப்படி அடிக்கடி ஸ்டேட்டஸ் கேட்கிற மாதிரி இருந்தா இப்பவே சொல்லிடுங்க... எங்க மேல முழு நம்பிக்கை இருந்தா மட்டும் தான் கன்டினியூ பண்ண முடியும். இல்லை இப்பவே நான் இந்த கேஸ்ல இருந்து விலகிக்கிறேன்" என்று ஒரேடியாக முருக்கிக்கொண்டாள் காவல்துறை கட்டழகி.

சூர்யாவிற்கு எரிச்சலும், ஆயாசமும் ஒருசேரத் தோன்றியது... 'அவனது உயிருக்கு உயிரான ஒரே தங்கைக்கு மோசமான விபத்து நேர்ந்திருக்கின்றது... அதன் பின்னணியை அறிந்து கொள்ள அவனது உடலும் மனம் துடித்துக்கொண்டிருக்கின்ற நேரத்தில் தனது பணியையும், பொறுப்பையும் கருத்தில் வைத்து பொறுமை காத்து வந்தால்... அந்த பொறுமைக்கு பெரும் சவாலாக இருக்கிறாளே இந்த திமிர் பிடித்தவள். ஆனால், அவனுக்கு இப்பொழுது வேறு வழியும் இல்லை. காரியம் ஆக வேண்டும் என்றால் இந்த சண்டிராணியின் அலட்சியத்தை சகித்துக்கொள்ளத் தான் வேண்டும்... ' நீ இவளுக்கு மிஸ் மஸ்டட்ன்னு பேரு வச்சதுல தப்பே இல்லைடா சூர்யா...! எப்படி பொறியிறா பாரு' மைன்ட் வாய்ஸில் தன்னையே மெச்சிக் கொண்டவன்..."ஓகே, பைன் பைன்... ஐ ட்ரஸ்ட் யூ... என் சைட்ல இருந்து உங்களுக்கு என்ன ஹெல்ப் வேணும் சொல்லுங்க..." என்றான் பொறுமையாகவே..."ஹெல்ப் எதுவும் தேவைப்படாது. அப்படி தேவைப்பட்டால் சொல்றேன். ஆனா, இப்போ உங்க கிட்டையும் என்கொயரி பண்ண வேண்டி இருக்கு. ப்ளீஸ் கோவாப்ரேட்" என்று மிடுக்காகப் மொழிந்தாள்.

அதைக் கேட்டு மனதிற்குள்  சிரித்தவன், "என்ன கேட்கனுமோ கேளுங்க? எனக்குத் தெரிந்ததை  சொல்றேன்" இசைவாகவே கூற...
"சென்னைவாசியான உங்க குடும்பம் இருபது வருஷத்துக்கு முன்னால எதனால ஹைதராபாத்துக்கு ஷிப்ட் ஆனீங்க...? முதல் கேள்வியிலே அவனை  அதிர வைத்தாள்.

'இரண்டே நாட்களில் இந்த தகவலை எல்லாம் எப்படி திரட்டி இருப்பாள்....!' திகைப்பு எழுந்தாலும், சிலபல யோசனைகளுக்குப் பிறகே "நல்லாப் போயிட்டு இருந்த அப்பா ஓட லெதர் பேக்டரியை சில காரணங்களால இழுத்து மூட வேண்டியதாப் போயிடுச்சு... கூட இருந்த பார்ட்னர்ஸ் லாபத்தை மட்டும் எடுத்துகிட்டு நஷ்டக் கணக்கை எங்கத் தலையில கட்டினதுல அப்பாவுக்குப் பெரிய லாஸ்... அதுல ஏற்பட்ட வெறுப்புல தான் இனிமேல் சென்னையே வேண்டாம்னு எங்களை எல்லாம் ஹைதராபாத் கூட்டிட்டுப் போயிட்டார்... அதுக்கு அப்புறம் அப்பா இருக்கிற வரை நாங்க யாரும் சென்னைக்கு வரலை "சுருக்கமாக சொன்னான் சூர்யா...
"ஓ! அப்போ, உங்க சிஸ்டர் சென்னைலத் தொழில் தொடங்கினதுக்கு உங்க அப்பாவுக்கு ஏற்பட்ட அனுபவம் தான் காரணமா?

யாராவது இன்வால்வாகி இருப்பாங்கன்னு உங்களுக்கு எதுவும் சந்தேகம் இருக்குதா?

"இல்லை, அப்படி இருக்க வாய்ப்பு இல்லைன்னு தான் நினைக்கிறேன்... முதல்ல எங்க அப்பாவுக்கு எதிரிங்கன்னு யாரும் கிடையாது... கூடவே இருந்த பார்ட்னர்ஸால தான் எங்க அப்பா ஏமாற்றப்பட்டார். அந்த ரெண்டு பேர்ல ஒருத்தர் இப்போ இந்தியாவிலே இல்லை... இன்னொருத்தர் இதே சென்னைல ரொம்ப சாதாரணமா தான் வாழ்ந்திட்டு இருக்கார்... நான் இங்க வந்ததும் முதல் வேலையா இதைத்தான் விசாரிச்சு தெரிஞ்சிக்கிட்டேன்."

அவன் சொன்னவற்றை அமைதியாக கேட்டுக் கொண்டவள்..."ம்ம்ம்... உங்க சிஸ்டர் மேரேஜ் உங்க முழு சம்மதம் இல்லாமல் தான் நடந்தது இல்லையா? கேட்டுவிட்டு இதற்கு சூர்யாவின் பதில் என்னவாக இருக்கும் என்பதிலே முழு கவனத்தையும் பதித்திருந்தாள்.

சற்றே முகம் மாறிய போதும் "ஆமாம்..." என்று ஒற்றை வார்த்தையில் பதில் வரவும்.
"அவங்க கல்யாணத்துக்கு பிறகும் கூட உங்களுக்கும் உங்க தங்கையோட கணவருக்கும் உறவுமுறை சரியில்லைன்னு கேள்விப்பட்டனே உண்மையா? அடுத்த கணைத் தொடுக்கப்பட்டது.
"அது என்னோட பெர்சனல் விஷயம் இதுக்கு பதில் சொல்லணும்கிற அவசியம் இல்லைன்னு நான் நினைக்கிறேன்..." இறுக்கத்துடன் வந்த வார்த்தைகளில் அவனது முகம் பழையை இலகுத்தன்மையை சுத்தமாகப் பிரதிபலிக்க வில்லை.
"அவசியம் இருகின்றதால தானே கேட்கிறேன்... சொல்லுங்க, உங்களுக்கும் ராம்சரணுக்கும் என்ன பிரச்சனை? விடாமல் விசாரணையை தொடர்ந்தாள்.
நெடிய மூச்சை வெளியிட்டு "அதான் நீங்களே சொல்றீங்களே என்னோட முழு சம்மதம் இல்லாம கல்யாணம் பண்ணிக்கிட்டாங்கன்னு அதான் பிரச்சனை.. வேறந்த தனிப்பட்ட பிரச்சனையும் எங்களுக்குள்ள கிடையாது..." அலட்சியமாகவேக் கூறி அந்த பேச்சிற்கு முற்றுப்புள்ளி வைக்க முயற்சித்தும்...
"அது மட்டும் தான் காரணமா? இல்லை வேற எதுவும் இருக்குதா?" குற்றம் சாட்டும் தோணியில் திருப்பினாள் அவள்...
'என்ன இவள்! என் மீதே சந்தேகப்படுவதுப் போல் பேசுகிறாள்...! என்னைப்பற்றி நல்லவிதமாகவே நினைக்கத் தோன்றாதா இவளுக்கு...?' எரிச்சலுடன் எண்ணியவன், கண்களில் முதல் முறையாக சினம் எட்டிப் பார்த்தது.
"ஏன்? வேற எதுவும் காரணம் இருக்குன்னு நீங்க நினைக்கிறீங்களா? அப்படி நினைச்சா நீங்களே அதை கண்டுபிடிங்க...! அது தானே உங்க வேலை? "மிஸ்டர் சூர்யா...! நீங்க கம்ப்ளெயின்ட் குடுத்திருக்கீங்கிறதுக்காக மட்டும் உங்களை உத்தமன்னு நம்பிட்டு இருக்க முடியாது.... விசாரணைன்னு வந்தா எல்லார் மேலையும் சந்தேகம் வரத்தான் செய்யும்... அதை நிவர்த்தி செய்ய நாங்க கேட்கிற கேள்விக்கு நீங்க பதில் சொல்லித்தான் ஆகணும்..." அவளும் ஒரு வேகத்துடன் சொல்ல... அவளது வார்த்தைகள் ஏற்படுத்தியக் காயத்தால் விளைந்த கோபத்தைக் கட்டுப்படுத்த பெரிதும் சிரமப்பட்டான் சூர்யா...

அதிகபடியானக் குற்றச்சாட்டு என்று தோன்றியதால் ஜிவுஜிவு என்றிருந்த சூர்யாவின் முகத்தைப் பார்த்து இந்துவும் சட்டென்று அமைதியாகி விட்டாள். அவனது கோபத்திலிருக்கும் நியாயமும் அவளுக்குப் புரிந்தது. அவனை வெறுப்பேற்றும் எண்ணத்துடன் இந்த விசாரணையை அவள் துவக்கவில்லை என்றாலும், இருவருக்கும் சம்பாசனை நேரும் சமயங்களில் அதிகப்படியாகவே வார்த்தைகளை விடுகிறோம் என்று தோன்றியதில் அவள் அடுத்து எதுவும் பேசாமல் இருக்க... அவனும் முகம் திருப்பித் தன்னைக் கட்டுபடுத்திக் கொண்டு ஒரு நிமிடம் வெறுமையாக இருந்தான். இருவருக்கிடையே கனத்த மௌனம் நிலவியது.

அறைக்கதவை தட்டும் ஓசை இருவருக்கிடையே அனுஷ்டித்திருந்த அந்த சில நொடி நிசப்தத்தைக் கலைக்க... "கம்மின்..." சூர்யா நிமிர்ந்து அமர்ந்து அனுமதி அளித்ததும், முன்பு வந்த அதே பணியாள் மீண்டும் காஃபி ட்ரேயுடன் உள்ளே வந்தான். "டேபிள்ல வச்சுட்டுப்போ முருகா...?" சொன்னவன், வேலையாள் சென்றதும் இந்துவின் புறம் ஒரு கப்பை நகர்த்தி வைத்து விட்டு மற்றொன்றை கையில் எடுத்தான். "நோ தேங்க்ஸ்... நான் தான் அப்பவே சொன்னனே என்கொயரிக்காக போற இடத்துல எதுவும் சாப்பிடற பழக்கம் இல்லைன்னு..." அவள் பழையை பல்லவியை திரும்ப பாட... வாயருகேக் கொண்டு சென்றதை கீழே வைத்துவிட்டு அவளைத் தீர்க்கமாகப் பார்த்தவன்...

"ஹ்ம்ம் நல்ல பழக்கம் தான்... ஆனா, அதே மாதிரி எனக்கும் ஒரு பழக்கம் இருக்குதே, இப்படி எதிர்க்க இருக்கிறவங்களை பார்க்க வச்சிட்டு நான் மட்டும் தனியா எதையும் சாப்பிடுறது என்னோட பழக்கம் இல்லை..." தீவிரமாக துவங்கி கேலியில் முடித்து புன்னகைக்க...

"நோ ப்ரோப்ளம்... மை வொர்க் இஸ் டன், நான் கிளம்புறேன்" விடாப்பிடியாக எழப்போனவளிடம் "ஓஹ்! கம்மான் இந்து! அம்பத்தூர்ல இருந்து உடனே கிளம்பியும். வீட்டுக்கு வரதுக்கு ஒன்னரைமணி நேரம் ஆயிடுச்சு. இன்னைக்கு லஞ்ச் கூட சாப்பிடலை. என்னை பார்த்தா உங்களுக்கு பாவமா இல்லையா...?" தோழமையுடன் வெகு இலகுவாக இயம்பியது, அவன் மேலிருந்த வெறுப்பை சற்றே தனித்து வியப்பை மேலோங்க செய்தது. இருந்தாலும், அவள் இலக மனமில்லாமல் அமர்ந்திருக்க...

"ஓகே... நேத்து மோர்னிங் உங்களை அப்படி வெறுப்பேற்றினது தப்பு தான். சாரி...போதுமா?ப்ளீஸ் காஃபி எடுத்துக்கோங்க.."கேலி மறைந்த குரலில் இறைஞ்ச... அவன் இப்படி தடாலடியாக இறங்கிப் பேசியதை நம்ப முடியாமல் பார்த்தவள், என்ன நினைத்தாளோ இதற்கு மேல் கெஞ்ச வைப்பது முறையல்ல என்பதால், அவனது புதுவித நடவடிக்கையில் ஏற்பட்டக் குழப்பத்துடனே கப்பை எடுத்துக் கொண்டாள்.

கையில் இருந்ததை அவள் மெல்ல மெல்ல உறிஞ்சுவதை பார்த்தவாறு தன்னுடையதை பருகினான் சூர்யா... மனம் சற்று இலகியிருந்ததாலோ என்னவோ... ஆதவனின் செங்கதிரினிம் ஆக்ரோசத்துடன் விழிகளைக் கூசச் செய்யும் ஒளிப்படைத்த முகத்தில் முகிலைக் கிழித்து வெளிவரும் குளிர் நிலவின் சாயலும் தென்பட்டது அவனுக்கு அபூர்வமாக இருந்தது போல... முதல் இரண்டு சந்திப்புகளில் கண்டிராத அந்த அமைதி கலந்த மென்மை அவனது இதய பாகத்தில் முதல் தடவையாக ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது.


'இப்பொழுது சாந்தமாக திகழும் இந்த முகம் தான் எத்தனை பிடிவாதத்தையும், அலட்சியத்தையும் வெளிப்படுத்துகிறது. துளி கூட ஒப்பனை இல்லாத முகம்! இவ்வளவு வசீகரத்துடன் திகழ முடியுமா?' தன்னை மீறி சிந்தித்தவனுடையக் கண்கள் நூதனமான ரசனைக்குத் தாவியதை அவன் அறியவில்லை. செவியோரத்தில் எட்டிப்பார்த்த சுருள்கேசம் செழுமையான கன்னத்தில் நர்த்தனம் புரிவது கண்களைக் கவர்ந்ததும்... அடுத்து, மினுமினுக்கும் ஆதாரங்களுக்கு மேலிருந்த கவிதை போன்ற கூர்நாசிக்கு சென்றது கவனம். இறுதியில் மின்னலொளி மிளிரும் அடர்ந்த இமைகளை கண்டு கரைந்தே போனது உள்ளம்.

"தேங்க்ஸ் போர் தெ காஃபி..." முகம் பார்த்துச் சொல்லிவிட்டு அவள் எழுந்ததும்... மனதுக்குள் சுழலத் துவங்கிய உணர்வுச் சூழலைச் சட்டென்றுக் கலைத்துக் கொண்டவன், அப்பொழுதும் தனக்குள் நிகழத் துவங்கியிருந்த எதிர்விளைவுகளைப் பற்றி உணர்ந்தான் இல்லை. "ஒன் மினிட், மிஸ் இந்துமதி..." என்று அவனும் எழுந்து நின்றான்.

முற்றிலும் புதுவிதமாகப் மாறிப்போயிருந்தக்  குரலில் தெரிந்த வித்தியாசத்தில் வாய்மொழியின்றி அவள் அவனை கேள்வியாகப் பார்க்க, "ஒன்றை  மட்டும்  தெளிவாப் புரிஞ்சிக்கோங்க... ரெண்டு பேருமே ரெஸ்பான்ஸிபிலான போஸ்ட்ல இருக்கோம்... இந்த கேஸ் விஷயமா இல்ல வேற வேலை விஷயமா  நாம அடிக்கடி மீட் பண்ண  வேண்டிய சிச்சுவேஷன் வரலாம். சோ, கூடிய சீக்கிரம்  என்கிட்டே இப்படி அட்டிடுட் காட்டுவதை  மாத்திக்கிறது நல்லது... நான் எல்லா நேரமும் ஒரே மாதிரி இருக்க மாட்டேன்..."

தணிந்தக் குரலிலே என்றாலும், எச்சரிக்கும் தோணியில் கட்டளையாக சொன்னதைக் கேட்டு..
சற்று நேரம் முன்பு வரை இருந்த இலகுத்தன்மைக்கு விடைகொடுத்து உடல் விறைக்க அவனை நிஷ்டூரமாக முறைத்தவள், அடுத்த கணமே விருட்டென வெளியேறினாள்.

தொடரும்:-
எழுத்தாளர்
அனுஅசோக்


கீழ்ப் படியக் கற்றுக்கொள்
கட்டளையிடும் பதவி
தானாக உன்னை
வந்து அடையும்
-சுவாமி விவேகானந்தர்

இப்படிக்கு
யாழிசை சந்திரா ஸ்ரீதர்



செல்வி - யாழிசை சந்திரா ஸ்ரீதர்

புறநானூறு

"யாதும் ஊரே; யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர் தர வாரா;
நோதலும் தணிதலும் அவற்றோரன்ன;
பெரியோரை வியத்தலும் இலமே;
சிறியோரை இகழ்தல் அதனினும்
இலமே."

கணியன் பூங்குன்றனார்


- ஜெகன் அருண் பிரசாத்





[redacted] ஜெகன் அருண்பிரசாத்

செல்வன்- ஜெகன் அருண் பிரசாத்






செல்வி - ஆதிரா அருண் பிரசாத்



செல்வன் - பத்ரீ பாண்டிராஜன் ஜீவா

# புதுமைப் பெண்

## எழுத்தாளர் - பத்மா தினேஷ்



### அத்தியாயம் - 1

இதோ திமிர்பிடித்த சாந்தா ஆபீசுக்குள் வந்துவிட்டாள். கலகலப்பாக இருந்த வங்கி ஊழியர்கள் அமைதியாய் அவரவர் வேலையைச் செய்ய ஆரம்பித்தார்கள். வங்கிக் கதவு திறந்து மக்கள் உள்ளேவர மீண்டும் பரபரப்பானது.

சாந்தா! அவளுக்கு யாருதான் இப்படிப் பெயர் வைத்தார்களோ என்று புலம்பாதவர்கள் யாரும் இல்லை அந்த அலுவகத்தில்.

சாந்தா ஒரு தனியார் வங்கியில் உயர் அதிகாரியாக வேலை செய்கிறாள். அடுத்த மாதத்தோடு 12 ஆண்டுகள் முடிவடைகிறது இந்த அலுவலகத்தில் சேர்ந்து. கடைநிலை ஊழியராகச் சேர்ந்துப் படிப்படியாகப் பல பரிட்சைகள் காகிதத்தில் மட்டுமல்ல வாழ்கையிலும் எழுதித்தான் இந்த நிலைக்கு வந்திருக்கிறாள். இது அங்கு இருக்கும் பல தற்காலிக வேலையாட்களுக்குத் தெரியுமோ இல்லையோ,

பலவருடகாலமாக அங்கு காவலாளியாகப் பணியாற்றும் தத்தாவிற்கு தெரியும் அவள் யார் என்று!!

இதோ ஆரம்பித்து விட்டாள். ஏதோ பணக்கணக்கு முன்னுக்குப்பின் முரணாக, அவள் மேலாளரை வசைப் பாடிக்கொண்டிருந்தாள். கண்ணாடி வழியாகப் பார்த்தவர்கள் பொம்பளையா இது என்று திட்டிக் கொண்டிருந்தார்கள்.


அவளின் பத்து வயதிலேயே அரசுப் பள்ளி ஆசிரியரான அப்பாவை இழந்துவிட, விவரம் தெரிய ஆரம்பித்தப் பருவம் என்பதால், சிறுவயதிலேயேத் தன்னை அப்பாவாகவேத் தன் குடும்பத்திற்காகத் தயார்படுத்திக் கொண்டாள். காரணம் அவளின் குடும்பச் சூழல்.

என்ன தான் அப்பாவின் ஓய்வுதியப்பணம், வீட்டுச் செலவிற்குக் கிடைத்தாலும், அவரின் இடத்தை நிரப்ப ஒரு ஆள் தேவைப்பட்டது. வெகுளியான அம்மா, இரண்டு வயது இளையத் தங்கை, ஏழு வயது இளையத் தம்பி என நான்கு பேர் கொண்ட அழகியக் குடும்பம்.

தங்கைக்கு வரன் பார்த்து முடிவாகி விட்டது, தம்பி பொறியியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு படிக்கின்றான். தனக்கென ஒரு வாழ்க்கையை அமைத்துக்கொள் என அம்மா எவ்வளவுச் சொல்லியும், பிறகுப் பார்க்கலாம் பிறகுப் பார்க்கலாம் எனக் கூறிக் காலம் கடத்திக் கொண்டிருந்தாள். காரணம்...... (தொடரும்....)

அன்புடன்,
பத்மா.

## கல்வி


கல்வி


"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை".
அதாவது உலகத்தில் மனிதர்களுக்கு
கல்வி தான் சிறந்த செல்வம்
ஏனைய செல்வங்கள் இதற்கு
இணையாக மாட்டாது.
கல்வி ஏனைய செல்வங்களை
விடவும் சிறப்புடைய செல்வமாக
காணப்படுவதற்கு காரணம் அது
"வெள்ளத்தால் அழியாத செல்வமாகும்
படிப்பால் மட்டுமே பாரதத்தை பாரான
செய்யலாம் என்ற "டாக்டர் அப்துல்
கலாமின்" வார்த்தைகளை போல நாமும்
கல்வியின் அவசியத்தை உணர்ந்து கற்று
மேன்மை அடைவோம்.

நன்றி

- அமான்டா லினேட் பிரின்ஸ்

செல்வி - அமான்டா லினேட் பிரின்ஸ்


## ஐவகை நிலங்கள்


ஐவகை நிலங்கள்
குறிஞ்சி - மலையும் மலைசார்ந்த இடமும்
முல்லை - காடும் காடு சார்ந்த இடமும்
மருதம் - வயலும் வயல் சார்ந்த இடமும்
நெய்தல் - கடலும் கடல்சார்ந்த இடமும்
பாலை - சுரமும் சுரம் சார்ந்த இடமும்.
இப்படிக்கு
மித்ரா



செல்வி - மித்ரா


## ஆத்திச்சூடி


ஆத்திசூடி
அ பேதைமை அகற்று
அறியாமையைப் போக்கு
- ஹர்ஷிவ்




செல்வன் - ஹர்ஷிவ் எல்லப்பா சந்திரா ஸ்ரீதர்

பழமொழிகள்




1. நல்ல தொடக்கம் நல்ல முடிவைத் தரும்
2. அறிவே ஆற்றல்
3. அனுபவமே சிறந்த ஆசான்
4. சிறுதுளி பெருவெள்ளம்
5. தன் கையே தனக்கு உதவி
6. செய்யும் தொழிலே தெய்வம்
7. வரும் முன் காப்பதே சிறந்தது

ஆத்விக் ராஜேஷ்



செல்வன் - ஆத்விக் ராஜேஷ்



வீட்டுக்கு வீடு வாசப்படி !!

பொருள்:

ஒவ்வொரு வீட்டுக்கும் ஒவ்வொரு பிரச்சனை இருக்கும்.


உண்மையான பொருள்:

மேன்மையான வாழ்க்கை என்னும் வீட்டுக்கு ஆன்மிகம் என்னும் வீடு தான் வாசற்படி என்பதே சரியான பொருள்.


ஜஸ்மிதா
தென்றல்மணி

செல்வி - ஜஸ்மிதா தென்றல் மணி

## பழமொழி




புண்பட்ட மனதை புகை விட்டு ஆத்து.
உண்மையான பொருள்:
புண்பட்ட மனதை புக விட்டு ஆற்று
மனது புண்பட்டிருக்கும் போது,
தமக்கு பிடித்த வேறொரு செயலில்
மனதை புக விட்டு ஆற்றி கொள்ள
வேண்டும் என்பதே சரி.
-கனிஷ்கா சுகுமாறன்.



செல்வி - கனிஷ்கா சுகுமாறன்

## பாரம்பரிய விளையாட்டுக்கள்



பாரம்பரிய விளையாட்டு

பல்லாங்குழி- இருக்கும் இடத்தில் எடுத்து இல்லாத இடத்தில் கொடுக்கும் குணம் வளர...

பரமபதம் - ஏற்றம், இறக்கம் இரண்டும் இருப்பதே வாழ்க்கை என்பதை உணர்த்த...

கில்லி- கூட்டல், பெருக்கல் கணக்கைக் களிப்புடன் மகிழ்ந்து கற்க

தாயம் - வெட்டி வெளியே எறிந்தாலும் மீண்டும் முயன்று தொடங்கி முன்னேற...

சதுரங்கம் - இதர வழி இல்லாதபோதும் இறுதிவரை போராடும் உறுதி மனம் பெற...

நொண்டி - சமமாக இல்லாதபோதும் சாதிக்கத் தூண்டும் சக்தியைப் பெற...

- கிருப்பன்யா சுரேஷ்




செல்வி - கிருபன்யா சுரேஷ்

# Best Wishes From

Culture & Cuisine

An Authentic Experience

**Home Style South Indian Catering,Training and Events**

**Revathy Sukumaran**

**+1(720)362-0873**

**revathys@cultureandcuisinellc.com**

**www.cultureandcuisinellc.com**

**Follow us on**

**@cultureandcuisinellc**